NELLAI GOPAL
SENIOR JOURNALIST

# பதவி இறக்கமோ, பணியிடை நீக்கமோ செய்யபட வேண்டியவருக்கு பணியிடமாற்றம் மட்டும்தானா !?



போக்குவரத்து துறை ஒட்டன்சத்திரத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த பூங்குழலியின்,லஞ்ச லாவண்யங்களும் விதிமீறல் பணிகளும் நிரூபணமானதால் போக்குவரத்தின் செயலாக்க பிரிவான நாகர்கோவிலுக்கு "ஆய்" வாளரான பூங்குழலி அப்போது பணியிட மாற்றப்பட்டார்.

அதன் பின் போக்குவரத்து ஆணையரான ஜவஹர் IAS க்கு 25 லட்சமும், DTC நாகஜோதிக்கு பல லட்சங்களும் கொடுத்து முறைகேடான வழிகளில் பதவி உயர்வு பெற்றார். (இது சம்பந்தமான நமது புகார்கள் எல்லாம் நிலுவையில் உள்ளது)

அவர் மீது உள்ள துறை ரீதியான குற்ற நடவடிக்கைகள் மற்றும் ஒட்டன்சத்திர காவல் நிலையத்தின் FIR-ரும் உள்ள நிலையில், ஏற்கனவே நிரூபணமான, குற்ற கோப்புகள் அனைத்தையும் மறைத்து, RTO-வாக பதவி உயர்வு பெற்று சென்னை தெற்பகுதியின் செயலாக்க பிரிவு அதிகாரியாக பதவி உயர்பெற்று கஞ்சா கடத்தலுக்கும் உதவி வந்தார்.

தற்போது சில மேலிட புள்ளிகளுக்கு வாரி இறைத்த லஞ்சத்தின் மூலமாகவும், ATC மணக்குமார் DTC நெல்லையப்பன் வரை லஞ்சங்கள் பட்டுவாடா செய்யப்பட்டு, ரெகுலர் பணியான RTO குமாரபாளையம் பகுதிக்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் பூங்குழலி என்ற செய்திகள் நமக்கு வந்த வண்ணமாய் உள்ளது.

பூங்குழலியின் பணியிட மாற்றத்திற்காக உதவியவர்களுக்கே, இவரது முறைகேடுகள் அனைத்தும் அறிந்திருந்ததால் என்னவோ, வருமானம் குறைவாக உள்ள குமாரபாளையம் RTO . அலுவலகத்துக்கு இவர் பணியிட மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக கூறி வருகின்றனர்.

அதே நேரத்தில் அந்த VIP களான இவர்கள் எல்லாம், பூங்குலியை பற்றி தவறாக எடை போட்டுவிட்டார்கள் அதாவது, செயலாக்க பிரிவிலே மாதம் 50 லட்சத்திற்கு குறையாமல் வருமானம் பார்த்து வந்த பூங்குழலிக்கு, ரெகுலர் பணியான RTO அலுவலகத்தில் பணியிடமாற்றம் செய்யப்பட்டதால், ஒரே நேரத்தில் திருப்பதி ஏழுமலையானுக்கு உள்ள மொத்த லட்டுகளையும் பூங்குழலியின் கைக்கு கொடுத்த (வந்த) மாதிரிதான் என்கின்றனர் விபரமறிந்தவர்கள்.

இப்படிப்பட்ட முறைகேடான, ஊழல் திமிலங்கமான பூங்குழலிக்கு குமாரபாளையம் ரெகுலர் RTO அலுவலகத்தை ஒப்படைத்திருப்பது அந்தந்த பகுதியில் பெருகும் விபத்துக்களே இவரது ஊழலுக்கு தகுந்த ஆதாரமாக இனி எழுந்து நிற்கும்.

எனவே இதுவரை அங்கு நடந்த விபத்துக்களின் எண்ணிக்கைகளும். இவரது பதவி ஏற்புக்கு பின் விபத்துக்கள் ஏற்படும் சர்வேக்களே நமது பதிவின் உண்மைகளை உணர்த்தும்.

பணியிடை நீக்கமும், பதவி இறக்கமும் செய்யப்பட வேண்டிய RTO பூங்குழலிக்கு போக்குவரத்து துறை நிர்வாகம் குமாரபாளையம் RTO அலுவலகத்திற்கு அதிகாரியாக பணியிட மாற்றம் செய்யப்பட்டிருப்பது மிகமிக கொடுமையான செய்திகளாகும்

அதிரடியான அதிகாரியான நிர்மல்ராஜ் IAS-ன் கோப்பில் விழுந்த ஓட்டை எப்படி?

கவனிப்பாரா ஆணையர்? அதிரடி காணுமா அரசு?

*நெல்லை கோபால்*
*மூத்த பத்திரிகையாளர்*
*12-10-2022/9994478389*